


தனி பிரதி ரூ.10/-

Single Copy Rs.10/-

ANNUAL SUBSCRIPTION Rs.120/-





# பொறியியல் கதிர்

# PORIYIYAL KADHIR


TAMIL & ENGLISH MONTHLY

| கதிர் 49 | பாரிப்பு 6 | திருவள்ளுவர் ஆண்டு 2048 | பிப்ரவரி - 2018 |
|---|---|---|---|
| KADHIR 49 | PAARIPPU 6 | THIRUVALLUVAR AANDU 2048 | FEBRUARY- 2018 |


பேரறிஞர்
அண்ணா



நினைவு நாள்
03.02.2018


நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம் 1910

தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு 2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org email id : tneapwd@yahoo.co.in

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளையின் முன்னாள் செயலாளர் பொறியாளர். N.நாகராஜன், உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கு பொங்கும்நிதியில் இருந்து நலநிதி தொகையாக ரூ. 15,000க்கான வரைவோலை கிளைத் தலைவர் பொறியாளர் R.வேதமூர்த்தி மற்றும் பொருளாளர் பொறியாளர் V.சிவப்பிரகாசம் ஆகியோர்களால் வழங்கப்பட்டது.




தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளைப் பொதுக்குழு கூட்டத்தில் மாநிலத்தலைவர் C.கணபதி அவர்களுக்கு கிளையின் தலைவர் R.தயாளகுமார் அவர்கள் சால்வை அணிவித்தல்.



பொதுச் செயலாளர் மடல்

மடல் - 6 (2017 - 2018)



## தொடரும்

## நம் பயணம் .......

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

14.09.2017 அன்று அரசு ஆணை எண். 1க்கு சாதகமாக உச்சநீதி மன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக நமது சகோதர சங்கம் முதலில் Calrification Petition போட்டது. அது ஆரம்ப கட்டத்திலேயே தள்ளுபடி செய்யப்பட்டது. பின்பு மறு சீராய்வு மனு (Review Petition) போட்டது. அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது.

உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் பல்வேறு தடைகளை சந்தித்து வருகிறது. இது சம்பந்தமாக இரு சங்கங்களையும் அழைத்து பேச்சு வார்த்தை நடத்த உள்ளதாக தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் கூறியிருந்தார். அதன்படி 11.01.2018 அன்று நமது சங்கத்திற்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. மாநிலத் தலைவர் அவர்கள் தலைமையில் பொறுப்பாளர்கள் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர். இணைத் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் மற்ற அதிகாரிகளுடன் இணைந்து பேச்சு வார்த்தை நடத்தினார். 10.01.2018 அன்று நமது சகோதர சங்கத்தை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள்.

உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வை விரைந்து பெற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

39 பொறியாளர்களுக்கு பணியிடைக்காலம் பிழை பொறுத்தல் கோப்பு (Break in Condonation) சம்பந்தமாக கேட்கப்பட்ட விவரங்கள் இன்னும் சில பொறியாளர்களிடம் இருந்து வந்து சேரவில்லை. எனவே விவரங்கள்

அனுப்பாதவர்கள் தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் கேட்கப்பட்ட விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**

**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)

பொதுச் செயலாளர்

**Er.D. MURUGESAN, General Secretary**
**Cell Nos.** 9444 999 588, 988 444 98 97
**E.mail: d.murugavelsivan@gmail.com**

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 48 பொதுப்பணித் (எப்1) துறை நாள் 31.01.2018)

| வ.எண் பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|
| 1. A மாதவன் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 2. A. முத்து | கண்காணிப்புப் பொறியாளர் |
| 3. S. சந்திரகலாதரன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 4. A.M. அசோகன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 5. M. தங்கமுத்து | செயற் பொறியாளர் |
| 6. M. பொஸ்கோ ஆக்னோஸ் மேரி | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 7. V. அகஸ்டின் | தலைமை வரைதொழில் அலுவலர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்

அரசு முதன்மைச் செயலாளர்

ABSTRACT

Shifting of Headquarters of the Sub-Divisions / Sections of the Water Resources Department of Public Works Department - Delegation of powers to Superintending Engineers of Water Resources Department - Orders - Issued.

Public Works (G2) Department

G.O. (D). No. 419 Dated: 12.12.2017

1. G.O. (D). No. 101 Public Works (G2) Department, Dated: 22.03.2013

2. From the Engineer-in-Chief, Water Resources Department, Chennai- 5, Letter No.AEE/T1/AE1/40006/11, dated 02.03.2016.

ORDER:

In the Government order first read above, orders have been issued for delegation of powers to the Superintending Engineers of Water Resources Department of Public Works Department for shifting headquarters of Sub-Divisions / Section, for a period of three years with effect from 22.03.2013.

2. In the letter second read above, the Engineer-in-Chief, Water Resources Department, has stated that the Water Resources Department of Public Works Department is involved in execution of various irrigation projects of the state such as IAMWARM, Dam Rehabilitation and Improvement Project, Special Projects, Plan and Non-Plan Schemes, Implementation of Major and Medium Irrigation Projects, etc., and the Water Resources Department is included to work round the clock during emergecies particularly at the time of flood, eviction, visit of V.I.Ps etc., delegation of powers to Superintending Engineers of Water Resources Department for shifting of the Headquarters of Sub Divisions / Section is absolutely necessary and requested orders of the Government for the continuance of delegation of powers to the Superintending Engineers of Water Resources Department of Public Works Department for shifting the Headquarters of Sub-Divisions / Sections of Water Resources Department for a period of three years beyond 22.03.2016.

3. The Government have accepted the proposal of the Engineer-in-Chief, Water Resources Department, Chennai and direct that the powers delegated to the Superintending Engineer of Water Resources Department for shifting the Headquarters of Sub-Divisions / Sections of Water Resources Department for a period of three years with effect from 22.03.2016 to 21.03.2019.

4. This order issues with the concurrence of Finance Department vide its U.O. No. 59637/P.W-II/17, Dated 06.12.2017.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S.K. PRABAKAR**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

## விடை பெறுகிறேன்



பொறி.அ.வேலுச்சாமி.டி.சி.இ.,பி.இ.,எம்.பி.ஏ.,
உதவி செயற்பொறியாளர், பொபது, (ஓய்வு)
மதுரை.
அலைபேசி எண்: 94439 17812

பொதுப்பணித்துறையில் 35 ஆண்டுகள் 7 மாதம் பணி செய்து 31.12.2017ல் வயது முதிர்வின் காரணமாக பணி நிறைவு பெற்று ஓய்வு பெறுகிறேன்.

நான் 1976 முதல் 1979 முடிய மதுரை தமிழ்நாடு பாலிடெக்னிக்கில் பயின்று டி.சி.இ பட்டயம் பெற்றேன்.

27.05.1982ல் பொதுப்பணித்துறையில் இளம் பொறியாளராக நாகர்கோவில் அனந்தனார் சீரமைப்பு கோட்டத்தில் பணியில் சேர்ந்தேன்.

பின் 1986 முதல் 1989 வரை மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் பகுதிநேர பொறியியல் பயின்று பி.இ பட்டம் பெற்றேன். ஜனவரி 1990 முதல் 2009 ஜூன் முடிய உதவிப் பொறியாளராகவும் 2009 ஜூன் முதல் 2017 டிசம்பர் முடிய உதவி செயற்பொறியாளராகவும் பல்வேறு பிரிவுகளில் பணிபுரிந்து ஓய்வு பெறுகிறேன்.

நான் இந்த நேரத்தில் நமது பட்டயப் பொறியாளர்களுக்காக தமிழ்நாடு பொறியியல் சங்கம் நடத்திய பல்வேறு போராட்டங்களையும் ஆற்றிய தொண்டினையும் நினைவு கூற கடமைப்பட்டுள்ளேன்.

நன்றியுடன்,

(அ.வேலுச்சாமி)

பெறுநர்,

அரசு முதன்மை செயலாளர்,
பொதுப்பணித்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்),
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை மண்டலம்
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதி - உதவி செயற்பொறியாளர் பதவிக்கு நேரடி நியமனம் கோருதல் - தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை எண்.1582 / பொ.ப.து / நாள். 11.9.85.

உயர்திரு. அரசு முதன்மைச் செயலாளர், முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களின் கனிவான பார்வைக்கு கீழ்காணும் விவரங்களைச் சமர்ப்பித்துக் கொள்கிறோம்.

தற்பொழுது நடைமுறையில் உள்ள தமிழ்நாடு பொறியியல் பணியமைப்பு விதிகளின்படி உதவி செயற்பொறியாளர் பதவிக்கான நியமன விதிகளில் கீழ்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

| Category | Method of Recruitment |
|---|---|
| 4. Assistant Executive Engineer | (1) Direct recruitment;<br>Or<br>(2) Promotion from Assistant Engineer;<br>Or<br>(3) Recruitment by transfer from Junior Engineer, Head Draftsman, or Draftsman Grade I of the Tamil Nadu Engineering Subordinate Service |

மேலும், அதே பொறியியல் பணியமைப்பு விதிகளில் விதி C (i)ல் கீழ்க்கண்டவாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

C (i) such number of subordinate vacancies among Assistant Executive Engineer as the state Government may from time to time determine shall be filled or reserved to be filled by direct recruitment on the results of a competitive examination.

மேற்காணும் நடைமுறை விதிகளின்படி குறிப்பிட்ட எண்ணிக்கை உதவி செயற்பொறியாளர் பதவியினை நேரடி நியமனத்திற்கு ஒதுக்கி, தேர்வாணைய போட்டித் தேர்வு மூலம் நிரப்ப வேண்டும். இதன் மூலம் அப்பதவியில் இன சுழற்சி அடிப்படையில் அனைத்து பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, உதவி செயற்பொறியாளர் பதவியில் தற்போது காலியாக உள்ள பதவிகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையினை நேரடி நியமனத்திற்கு ஒதுக்கீடு செய்து, தேர்வாணையம் மூலம் நியமனம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறும், அதன் பின்னர் எஞ்சியுள்ள

உதவி செயற்பொறியாளர் காலிப்பணியிடங்களை ஏனைய நியமன முறை மூலம் நிரப்பிடுமாறும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

(சி. கணபதி)
மாநிலத் தலைவர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

---

பெறுநர்,

முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்),
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை மண்டலம்
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பொதுப்பணித்துறை - பிரிவு அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பல்வேறு கருத்துருக்கள் உரிய வழியாக அனுப்புவதில் அதிக காலதாமதம் ஆவது தவிர்க்க கோருதல் - சம்பந்தமாக.

பொதுப்பணித்துறையின் கீழ்மட்டத்தில் இளம்பொறியாளர் / உதவிப்பொறியாளர்கள் உரிய வழியாக கருத்துருக்கள், விண்ணப்பங்கள் அனுப்பும் போது பிரிவு அலுவலகத்திலிருந்து முதன்மைத் தலைமைப் பொறியாளர் அலுவலகம் செல்வதற்கு சுமார் 1 வருடம் முதல் 2 வருடங்கள் வரை ஆகிறது. இதனால் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றார்கள். எனவே இனி வரும் காலங்களில் பணிப்பதிவேடு பராமரிக்கும் அலுவலரிடமிருந்து முதன்மைத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு கருத்துருக்களை நேரடியாக அனுப்பி விட்டு தத்தம் உயர் அலுவலர்களுக்கு நகல் அனுப்ப உரிய அறிவுரை வழங்குமாறு கேட்டுகொள்கிறேன்.

(சி. கணபதி)
மாநிலத் தலைவர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

பெறுநர்,

தலைமைச் செயலாளர்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

அரசுச் செயலாளர்,
பொதுப்பணித்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

முதன்மைச் செயலாளர்,
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

செயலாளர்,
தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம்,
சென்னை.

முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்),
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை மண்டலம்
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.படது.,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பணியமைப்பு - பொ.ப.து - தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதி - அரசாணை எண் 1/பொ.ப.து /நாள். 02.01.1990 ஆணைக்கு - விதித்திருத்தம் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண் 1 /பொ.ப.து/பி2/நாள். 2.01.1990.
2. அரசாணை எண் 88 /பொ.ப.து/பி2/நாள். 22.01.1991.
3. அரசு கடித எண். 26642/பி2/2003-10/ பொபது/ நாள். 24.02.2006.
4. உச்ச நீதிமன்ற வழக்கு எண். (SLP (Civil) No. 2495 of 2007) தற்போது CA No.995/2009, 997/ 2009 மற்றும் 998/2009 மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நாள். 14.09.2017.

கீழ்காணும் விவரங்களை தங்களின் மேலான பார்வைக்கும், உரிய நடவடிக்கைக்கும் பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

பார்வை 1ல் காணும் அரசாணை எண் 1/பொ.ப.து/நாள் 2.01.1990ல் இளநிலை வரைதொழில்அலுவலர், வரைதொழில்அலுவலர், ஓவர்சீயர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர், 5 வருடங்கள் பணிமுடித்திருந்து பி.இ/ ஏ.எம்.ஐ.இ., பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருந்தால், அவர்களை உதவிப்பொறியாளர் பதவியில் பணிமாற்றம் (Recruitment by Transfer) மூலம் நியமனம் செய்ய ஆணை வழங்கப்பட்டது. மேலும் இது தொடர்பாக தமிழ்நாடு பொறியாளர் சார்நிலை மற்றும் தமிழ்நாடு பொறியியல் பணிகளுக்கான சிறப்புவிதிகளில் விதித்திருத்தம் செய்வதற்கான கருத்துருவினை விரைவில் அனுப்பவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதுதவிர, பார்வை 2ல் காணும் அரசு ஆணையில், பார்வை 1ல் கண்ட ஆணையின் படி பணிமாற்றம் (Recruitment by Transfer) மூலம் உதவிப்பொறியாளர் பணி நியமனம் செய்வதற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வணையத்திடம் (TNPSC) இசைவுபெற தேவையில்லையென அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை 1க்கு விதித்திருத்தம் (Rule Amendment) வழங்கக்கோரி கருத்துரு தலைமைப்பொறியாளர் (பொது) அவர்களால் அரசுக்கு அனுப்பப்பட்டது. அந்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதாக பார்வை 3ல் காணும் அரசுக் கடிதம் பத்தி எண் 2ன் இறுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண். 1ன் மூலம் பணிமாற்றம் அடிப்படையில் உதவிப்பொறியாளர் பணி நியமனம் தொடர்பான, உயர்நீதிமன்ற பெஞ்ச் வழக்கு எண். WA எண். 95/ 2015ல் விசாரணை நடைபெற்ற போது, அரசு முதன்மை செயலாளர், பொதுப்பணித்துறை அவர்களால் நீதிமன்றத்தில் 02.03.2015ல் சமர்ப்பிக்கப்பட்ட எதிர்வாதுரை பத்தி 11ல் அரசாணை எண். 1 சம்பந்தமான வழக்கு, உச்ச நீதிமன்றத்தில் SLP (Cvil) No. 2495 of 2007 நிலுவையில் இருப்பதால், தற்சமயம் விதித்திருத்தம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்நிலையில் அரசு கடித எண்.13249/A2/2013-3 /பொபது/ நாள்15.04.2015ல் அரசாணை எண் 1க்கு உச்சநீதி மன்றத்தில் வழக்கு எண் (SLP (Cvil) No. 2495 of 2007) தற்போது CA No 995/2009, 997/2009 மற்றும் 998/2009 ஆகியவை நிலுவையில் இருக்கும் போது, விதித்திருத்தம் வழங்க வழிவகை உள்ளதா என சட்ட ஆலோசனை கேட்டு அரசு வழக்கறிஞருக்கு கடிதம் எழுதப்பட்டது. அதனைத் தொடர்ந்து 11.08.2015ல் இது தொடர்பாக நினைவூட்டுக் கடிதமும் அனுப்பப்பட்டது.

அரசாணை எண்.1/ நாள். 02.01.1990 சம்பந்தமாக பொறியாளர் சங்கத்தால் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட பார்வை எண்.4ல் காணும் மேல்முறையீட்டு வழக்குகள் மற்றும் IA 68961 / 2017 உள்பட அனைத்து வழக்குகளும் 14.09.2017 நாளிட்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டு, அரசாணை எண்.1க்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் உச்சநீதிமன்றத்தில் பொறியாளர் சங்கத்தின் மூலம் தொடரப்பட்ட Clarification Petition 30.10.2017 நாளிட்ட IA/2017 in CA No. 995/ 2009 வழக்கும் Admission நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட்டு, அரசாணை 1க்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. உச்சநீதி மன்றத்தில் தீர்ப்பு வந்து சுமார் மூன்று மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறியாளர் சங்கத்தின் சார்பாக உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் அரசாணை எண்.1க்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால், தற்போது அரசாணை 1க்கு விதித்திருத்தம் மேற்கொள்ள எவ்வித தடைகளும் இல்லை. எனவே விரைவில் விதித்திருத்தம் வழங்க ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தற்போது காலியாக உள்ள உதவிப்பொறியாளர் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் நிரப்புவதற்கு அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. அரசாணை எண்.1க்கு விதித்திருத்தம் வழங்கப்பட்ட பின்னர் உள்ஒதுக்கீடு (3:1) விகிதாசாரத்தின் அடிப்படையில் நேரடி நியமனம் (TNPSC) மூலம் உதவிப்பொறியாளர் காலிப்பணியிடங்களை நிரப்ப ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(சி. கணபதி)
மாநிலத் தலைவர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

பெறுநர்,

தலைமைச் செயலாளர்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

அரசுச் செயலாளர்,
பொதுப்பணித்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

முதன்மைச் செயலாளர்,
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

செயலாளர்,
தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம்,
சென்னை.

முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம்
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதி - உதவி செயற்பொறியாளர் பதவியினை போட்டித் தேர்வு வைத்து நேரடி நியமனம் (TNPSC) மூலம் நிரப்புவது - சம்பந்தமாக.

பார்வை : 1. அரசாணை எண். 1582 / பொ.ப.து / நாள். 11.09.1985.

2. தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதி - சிறப்பு விதி - பகுதி2 - பிரிவு - 1பொதுப்பணித்துறை.

கீழ்காணும் விவரங்களை தங்களின் மேலான பார்வைக்கும், உரிய நடவடிக்கைக்கும் பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

தற்பொழுது நடைமுறையில் உள்ள தமிழ்நாடு பொறியியல் பணியமைப்பு விதிகளின்படி உதவிசெயற்பொறியாளர் பதவிக்கான பணிநியமன விதிகள் கீழ்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

AMENDMENTS

In the said Special Rules, in Part II, under the heading "Branch I – Public Works:-

2. Appointment.- (a) Appointment to the several categories in this branch shall be made as follows.:-

| *Category* | *Method of Recruitment* |
|---|---|
| 4. Assistant Executive Engineers | (1) Direct recruitment;<br>Or<br>(2) Promotion from Assistant Engineer;<br>Or<br>(3) Recruitment by transfer from Junior Engineer, Head Draftsman, or Draftsman Grade I of the Tamil Nadu Engineering Subordinate Service. |

மேலும், அதே பொறியியல் பணியமைப்பு விதிகளில் விதி C (i)ல் கீழ்க்கண்டவாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

C (i) such number of substantive vacancies among Assistant Executive Engineer, as the state Government may from time to time determine, shall be filled or reserved to be filled by direct recruitment on the results of a competitive examination.

மேற்காணும் நடைமுறை விதிகளின்படி குறிப்பிட்ட எண்ணிக்கை உதவி செயற்பொறியாளர் பதவியினை நேரடி நியமனத்திற்கு அவ்வப்போது ஒதுக்கி அல்லது Reservation செய்து, தேர்வாணைய போட்டித் தேர்வு (TNPSC) மூலம் நிரப்ப வேண்டும். இதன் மூலம் அப்பதவியில் இன சுழற்சி அடிப்படையில் அனைத்து பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொறியாளர் சங்கத்தின் கோரிக்கைப்படி இளமை வாய்ந்த துடிப்பான இளைஞர்கள் புதிய தொழில்நுட்பத்துடன் வருவதால் துறையினை சீரமைத்தால் தமிழக அரசுக்கும் பயன் உள்ளதாக அமையும்.

மேலும், தற்போதுள்ள நிலையில் பொறியியல் பட்டதாரிகள் ஒவ்வொரு ஆண்டும் அதிக எண்ணிக்கையில் தேர்ச்சி பெற்று வருகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்புவரை நேரடி நியமனம் (TNPSC) மூலம் உதவிசெயற்பொறியாளர் பணியிடம் நிரப்பப்பட்டது. தற்போது சில வருடங்களாக அரசு விதிகள் நடைமுறை படுத்தப்படவில்லை.

எனவே, உதவிசெயற்பொறியாளர் பதவியில் தற்போது காலியாக உள்ள 215 பதவிகளில், அரசு விதிகளின்படி நேரடி நியமனத்திற்கு உரிய விகிதாச்சாரத்தின்படி நிரப்ப போட்டித் தேர்வுகளின் மூலம் தேர்வாணையம் (TNPSC) மூலம் நிரப்பி விட்டு, அதன் பின்னர் எஞ்சியுள்ள உதவி செயற்பொறியாளர் காலிப்பணியிடங்களை ஏனைய நியமன முறை மூலம் நிரப்பிடுமாறும் வேண்டிக் கொள்கிறோம்.

(சி. கணபதி)
மாநிலத் தலைவர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

---

பெறுநர்,

அரசு முதன்மை செயலாளர்,
பொதுப்பணித்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்),
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை மண்டலம்
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பணியமைப்பு - பொ.ப.து - பணிமாற்றம் (Recruitment by Transfer) மூலம் உதவிப்பொறியாளர் பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் முதுநிலையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் - அரசு கூடுதல் எதிர்வாதுரை அளிக்க வேண்டுதல் - சம்மந்தமாக.

பார்வை : 1. அரசாணை எண் 1 /பொ.ப.து/பி2/நாள். 2.01.1990.
2. அரசு கடித எண். 26642/பி2/2003-10/ பொபது/ நாள். 24.02.2006.

3. உச்ச நீதிமன்ற வழக்கு எண். (SLP (Civil) No. 2495 of 2007)

தற்போது CA No.995/2009, 997/ 2009 மற்றும் 998/2009 மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நாள்.14.09.2017

பொதுப்பணித்துறையில் தொழில்நுட்ப உதவியாளர்களாக 5 ஆண்டுகள் பணிபுரிந்து, பணிபுரியும் போதே பி.இ., பட்டம் பெற்றிருந்தும் அப்போதைய சூழலில் பார்வை 1ல் காணும் அரசாணை எண் 1க்கு விதித்திருத்தம் செய்யப்படாத நிலை இருந்ததால் இளம் பொறியாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டு, பின்னர் பார்வை 2ல் காணும் அரசு கடிதத்தில் உள்ள Executive orderன் படி பணிமாற்றம் (Recruitment by Transfer) மூலம் 24.02.2006 அன்று முன்தேதியிட்டு G.O.MS. No. 1 / பொபது/ நாள். 02.01.1990 வாயிலாக உதவிப்பொறியாளராக பணியமர்த்தப்பட்டு, அரசாணை எண். 155 பொதுப்பணித்துறை (பி2) நாள் 13.08.2015ஐ தொடர்ந்து உரிய முதுநிலை அளித்து, கடித எண்.எஸ்.2(2)/ 59620/ 2015/ நாள். 18.01.2017 அன்று முதன்மைத் தலைமைப் பொறியாளர் அவர்களால் உரிய திருத்தம் வழங்கப்பட்டது. மேற்படி முதுநிலையை எதிர்த்தும், பணிமாற்றம் (Recruitment by Transfer) மூலம் G.O.1ன் படி நியமனம் செய்யப்பட்ட 189 உதவிப்பொறியாளர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வில் முன்னுரிமை வழங்கக்கூடாது என்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் கீழ்க்கண்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு எண்கள்.

1) WP/36614/2016
2) WP/43750/2016
3) WP/3617/2017
4) WP/8402/2017
5) WP/10117/2017
6) WP (MD) 6791/2017

மேற்கண்ட வழக்குகளில் 19.04.2017ல் வழங்கப்பட்ட சென்னை உயர்நீதி மன்ற Bench தீர்ப்பில் மூன்று மாத காலத்திற்குள் முடித்திட சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மேற்கண்ட வழக்குகளுக்கு அரசு தரப்பில் உரிய எதிர் வாதுரை நீதிமன்றத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டது.

தற்போது பார்வை 3ல் காணும் உச்சநீதிமன்றத்தில் பொறியாளர் சங்கத்தின் மூலம் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்குகள் மற்றும் IA No. 68961/ 2017 in CA No.995/ 2009 உள்பட அனைத்தும் 14.09.2017 நாளிட்ட தீர்ப்பில் தள்ளுபடி செய்யப்பட்டு, G.O.1க்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் உச்சநீதிமன்றத்தில் பொறியாளர் சங்கத்தின் மூலம் தொடரப்பட்ட Clarification petition 30.10.2017 தேதியிட்ட IA/2017 in CA No.995/2009 வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டு, G.O.1க்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, உச்சநீதிமன்ற தீர்ப்பினை மேற்கோள்காட்டி அரசு தரப்பில் உரிய கூடுதல் எதிர்வாதுரை அளித்து, உதவிப்பொறியாளர் முதுநிலையினை எதிர்த்து, உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளையும் தள்ளுபடி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

(சி. கணபதி)
மாநிலத் தலைவர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

# 2018 ஆம் ஆண்டு ஓய்வு பெற உள்ள ஆட்சி அலுவலர், இளம் பொறியாளர், உதவிப்பொறியாளர் அவர்களது பெயர் பட்டியல்

## ஜனவரி 2018

| வ.எண். திருவாளர்கள் | பிறந்த தேதி | பதவி | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|
| 1. M. செல்வராஜ் | 09.01.1960 | உ.பொ | கட்டட (க & ப) வட்டம், மதுரை |
| 2. A. குணசுந்தரி | 03.01.1960 | ஆ.அ | தாமிரபரணி வடிநில வட்டம், திருநெல்வேலி |
| 3. J. சாந்தா | 15.01.1960 | ஆ.அ | பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், துவாக்குடி, திருச்சி - 15. |
| 4. முகமது அப்துல் ரஷீத் | 01.02.1960 | ஆ.அ | முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து, சேப்பாக்கம், சென்னை-5. |

## பிப்ரவரி 2018

| | | | |
|---|---|---|---|
| 1. C. குப்புசாமி | 04.02.1960 | உ.பொ (மி) 25.4.2015 முதல் தற்காலிக பணிநீக்கம் | முதன்மைத் தலைமைப் பொறியாளர், (க) தலைமைப் பொறியாளர், (க) சென்னை மண்டலம், (ம) தலைமைப் பொறியாளர் (பொது) பொபது, சென்னை-5. |
| 2. C. சந்திரசேகரன் | 10.02.1960 | இ.பொ (மி) | மின் வட்டம், மதுரை |

## மார்ச் 2018

| | | | |
|---|---|---|---|
| 1. R. மனோகரன் | 02.03.1960 | உ.பொ (மி) | மின் வட்டம், திருச்சி |
| 2. M. ராமமூர்த்தி | 04.03.1960 | ஆ.அ | பெண்ணையாறு வடிநில வட்டம், திருவண்ணாமலை |
| 3. V.G. ஜெயகுமார் | 07.03.1960 | இ.பொ (மி) | மின் வட்டம், (க.அ) மின் சேப்பாக்கம், சென்னை |
| 4. T. ராஜா | 16.03.1960 | இ.பொ (மி) | மின் வட்டம், (க.அ) மின் சேப்பாக்கம், சென்னை |
| 5. M. விக்டர் | 20.03.1960 | இ.பொ (மி) | மின் வட்டம், (க.அ) மின் சேப்பாக்கம், சென்னை |
| 6. P. துரைபாண்டியன் | 28.03.1960 | இ.பொ (மி) | மின் வட்டம், (க.அ) மின் சேப்பாக்கம், சென்னை |

## ஏப்ரல் 2018

| | | | |
|---|---|---|---|
| 1. R.R. கணேஷ் | 27.04.1960 | உ.பொ | திட்ட உருவாக்க வட்டம், திருச்சி |
| 2. M. சந்திரசேகரன் | 05.04.1960 | உ.பொ | கட்டட (க & ப) வட்டம், மதுரை |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | T. அமல்ராஜ் | 06.04.1960 | உ.பொ | நிலநீர் வட்டம், மதுரை |
| 4. | N. அக்பர் உசேன் | 13.04.1960 | ஆ.அ | நிலநீர் வட்டம், மதுரை |

**மே 2018**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | R. கௌதமன் | 16.05.1960 | உ.பொ | வைப்பாறு வடிநில வட்டம், விருதுநகர் |
| 2. | S.அனந்தராமகிருஷ்ணன் | 15.05.1960 | உ.பொ (மி) | மின் வட்டம், (க.அ) மின் சேப்பாக்கம், சென்னை |
| 3. | C. கணபதி | 15.05.1960 | உ.பொ | கீழ்காவிரி வடிநில வட்டம், தஞ்சாவூர் |
| 4. | G. சிவசண்முகம் | 12.05.1960 | உ.பொ | கட்டட (க & ப) வட்டம், கோயமுத்தூர் |
| 5. | A.P. ஜெயராஜன் | 25.05.1960 | இ.பொ | பரம்பிக்குளம் ஆழியார் வடிநில வட்டம், பொள்ளாச்சி |
| 6. | G. ஐயப்பன் | 14.05.1960 | இ.பொ | கீழ்வைகை வடிநில வட்டம், சிவகங்கை |
| 7. | P. கணேசன் | 15.05.1960 | இ.பொ | வெள்ளாறு வடிநில வட்டம், கடலூர் |
| 8. | T. நாகரத்தினம் | 18.05.1960 | இ.பொ | கட்டட (க & ப) வட்டம், (ம.ப) சென்னை |
| 9. | S. ஆண்டியப்பன் | 19.05.1960 | ஆ.ஆ | தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து, சென்னை மண்டலம், சென்னை - 5. |
| 10. | C. அசோக்குமார் | 10.05.1960 | ஆ.ஆ | ஏரிகள் நவீனப்படுத்தும் வட்டம், வேலூர் |
| 11. | R.S. ராஜன் | 03.05.1960 | ஆ.ஆ | சிறப்பு திட்ட வட்டம், பழனி |
| 12. | N. முனுசாமி | 25.05.1960 | ஆ.ஆ | கட்டட (க & ப) வட்டம், கோயமுத்தூர் |
| 13. | M. அசோகன் | 25.05.1960 | இ.பொ (மி) | மின் வட்டம், மதுரை |

**ஜீன் 2018**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | N. வாசுதேவன் | 13.06.1960 | உ.பொ | திட்ட உருவாக்க வட்டம், சேலம் |
| 2. | S. அசோகன் | 30.06.1960 | இ.பொ | பாலாறு வடிநில வட்டம், சென்னை- 5 |
| 3. | M. சித்திரைக்கனி | 05.06.1960 | ஆ.அ | தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து, பொபது, கோயமுத்தூர் மண்டலம், கோயமுத்தூர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | D. சண்முகம் | 10.06.1960 | ஆ.அ | தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம், தரமணி, சென்னை - 113. |
| 5. | G. ரமணதிலகம் | 15.06.1960 | ஆ.அ | தலைமைப் பொறியாளர், (க), திருச்சி மண்டலம், திருச்சி |
| **ஜீலை 2018** | | | | |
| 1. | A. இராஜேந்திரன் | 19.07.1960 | உ.பொ | மேல் காவிரி வடிநில வட்டம், சேலம் |
| 2. | S. தயாமணி | 03.07.1960 | ஆ.அ | தலைமைப் கட்டடக் கலைஞர் சென்னை - 5. |
| 3. | P. தங்கவேல் | 23.07.1960 | இ.பொ | திட்ட வட்டம், வேலூர் |
| **ஆகஸ்ட் 2018** | | | | |
| 1. | S. சங்கிலி காளை | 06.08.1960 | இ.பொ | திட்ட உருவாக்க வட்டம், திருச்சி |
| **செப்டம்பர் 2018** | | | | |
| 1. | M. சதாசிவம் | 09.09.1960 | உ.பொ | கட்டட (க & ப) வட்டம், மதுரை |
| 2. | S.M. முகமது யூனூஸ் | 26.09.1960 | இ.பொ | சுற்றுச் சூழல் குழும வட்டம், திருச்சி |
| **அக்டோபர் 2018** | | | | |
| | | ------------------ ஒருவருமில்லை------------------ | | |
| **நவம்பர் 2018** | | | | |
| 1. | F. மைக்கேல் ராஜ் | 13.11.1960 | இ.பொ | கோதையாறு வடிநிலக் கோட்டம்,, நாகர்கோவில் |
| **டிசம்பர் 2018** | | | | |
| 1. | P. கார்த்திகேயன் | 08.12.1960 | உ.பொ | கட்டட (க & ப) வட்டம், திருச்சி |
| 2. | S. இராஜராஜன் | 10.12.1960 | இ.பொ | வெள்ளாறு வடிநில வட்டம், கடலூர் |
| 3. | V. நாகராஜீ | 01.01.1961 | இ.பொ (மி) | மின் வட்டம், (க.அ) திருச்சி |
| 4. | R. முனுசாமி | 01.01.1961 | இ.பொ | பெண்ணையாறு வடிநில வட்டம், திருவண்ணாமலை |

## இரங்கல்

தமிழ்நாடு பொறியியல் சங்கம் விருதுநகர் கிளை உறுப்பினர் பொறியாளர் P.ராஜசேகர் உதவிப் பொறியாளர் தரக்கட்டுப்பாடு பிரிவு அவர்கள் 23.01.2018 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

# இயங்கும் உலகம்

**சென்னை கிளை:**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளை புத்தாண்டு சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் 30.12.2018 அன்று பொறியியல் இல்லம் சி.ப.சண்முகம் அரங்கில் நடைபெற்றது.

சென்னை கிளை தலைவர் பொறியாளர் எஸ். சண்முகானந்தன் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்க பொதுச் செயலாளர் த. முருகேசன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்ள தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் இனிதே தொடங்கியது.

கூட்டத்திற்கு அனைத்து மையச்சங்க பொறுப்பாளர்களும் மூத்த பொறியாளர்களும், சென்னை கிளை உறுப்பினர்களும் பெரும் திரளாக கலந்து கொண்டார்கள்.

சென்னை கிளை தலைவர் உரையில் உறுப்பினர்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார். மையச்சங்கம் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் உறுப்பினர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும், உரிய காலத்தில் சங்கத்தின் 2018-க்கான நாட்காட்டி மற்றும் நாட்சுவடியை வெளியிட உறுதுணையாக இருந்த மையச்சங்க பொறுப்பாளர்கள் அனைவருக்கும் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொண்டார். கிளைச்செயலாளர் ஏ.மணிமாறன் அவர்கள் கிளை நடவடிக்கை குறித்து விவரித்தார்.

கிளை பொருளாளர் பொறியாளர் . எஸ். பாண்டியன் அவர்கள் கிளை நிதி நிலை அறிக்கையை அவையில் தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார்.

2018-ஆம் ஆண்டிற்கான நாட்சுவடியினை மூத்த பொறியாளர் ஆர்.வெங்கடசுப்பு அவர்களும், நாட்காட்டியினை தியாக செம்மல் பொறியாளர் சி.ப.சண்முகம் அவர்களும், தினசரி நாட்காட்டியினை மூத்த பொறியாளர் தி.ப.பாலசுப்ரமணியன் அவர்களும் வெளியிட பொதுச்செயலாளர் த.முருகேசன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். மூத்த பொறியாளர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்

உறுப்பினர்கள் அனைவருக்கும் 2018-ஆம் ஆண்டிற்கான நாட்சுவடி மற்றும் நாட்காட்டி வழங்கப்பட்டது.

பொதுச் செயலாளர் த. முருகேசன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக உரையாற்றினார்கள். உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு விபரமாக பதிலளித்தார். கிளை இணைச் செயலாளர் கே. ஆதிச் செல்வி அவர்களின் நன்றியுரைக்குப்பின் மதியம் அறுசுவை உணவுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## திருச்சி கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருச்சி கிளையின் பொதுக்குழுக் கூட்டம் மற்றும் புதுவருடக் கூட்டம் ஆகியவை திருச்சி, மன்னார்புரம், பொறியாளர்கள் ஹம்ஜா-கேசவராவ்-அடைக்கலதுரை அரங்கில் 30.12.2017 அன்று மாலை 5.00 மணியளவில் கிளையின் தலைவர் பொறி.ஆர்.தயாளக்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளராக, தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலத் தலைவர், பொறி.சி.கணபதி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பிறகு, கிளை பொதுக்குழு கூட்டத்திற்கு வருகை புரிந்தவர்களை கிளையின் இணைச் செயலாளர், பொறி.எஸ்.தங்கையன், வரவேற்றுப் பேசினார். பின்னர் சிறப்பு அழைப்பாளர் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலத் தலைவர் பொறி.சி.கணபதி, அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

பின்னர், திருச்சி கிளையின் தலைவர் பொறி.ஆர்.தயாளகுமார் அவர்கள் தலைமை உரையில், உறுப்பினர் வருகை குறித்தும், நமது தமிழ்நாடு பொறியியல் சங்கம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் சகோதர சங்கமான பொறியாளர் சங்கம் அடுத்தடுத்து எதிர்ப்புகளை தெரிவித்தும், எதிராக வழக்கு தொடர்வதும் வாடிக்கையாக உள்ளது. இந்த நடவடிக்கையினால், நமது சங்கம் எந்த சாதனைகளையும், உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற தீர்ப்புகள் பெறுவதிலும், அதனை அமுல் படுத்துவதிலும், பெரிய இடையூறாக இருந்துவருகிறது. சட்ட ரீதியாக தீர்வு செய்ய முற்பட்டாலும் அதற்கும் எதிர் வழக்குகளைத் தொடுத்து, தீர்வு ஏற்படுத்துவதற்கு தீராத இழுப்பறி ஏற்பட்டு வரும் அவல நிலை நிகழ்ந்து வருகிறது.

பொறி.சி.ப.சண்முகம், முன்னாள் மாநிலப் பொதுச் செயலாளர் அவர்கள் சகோதரச் சங்கத்தின் முன்னால் மாநிலப் பொதுச்செயலாளர் பொறி.வீரப்பன் அவர்களுடன் அமர்ந்து புரிந்துணர்வுடன் கொண்டுவந்த நடைமுறையில் உதாரணத்திற்கு 3:1 என்கின்ற விகிதாச்சாரம் இன்றளவும் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது என்கின்ற அனைத்து கருத்துக்களையும் உறுப்பினர்களுக்கும் எடுத்துரைத்தார். ஆக, நமது தமிழ்நாடு பொறியியல் சங்கமும் மற்றும் சகோதர சங்கமான பொறியாளர் சங்கமும் ஒன்றாக அமர்ந்து ஒரு அமைதிப் பேச்சுவார்த்தை (Peace Committee) நடத்த முடிவுகள் எடுத்தால் மட்டுமே நல்ல தீர்வு ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் எடுத்துரைத்தார்.

பின்னர் கிளைச்சங்க செயலாளர் பொறி.K.R.ஜெயராமன் அவர்கள் தமது உரையில், உறுப்பினர் வருகை குறித்தும், இல்லக்கட்டிடம் பராமரிப்பு பற்றியும், 7-வது ஊதியக்குழு சம்பந்தமாக நமது சங்கத்தின் நிலைப்பாடு, உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வின் தற்போதைய நிலை பற்றியும், இவற்றினை விரைந்து பெற்றிட ஆவண செய்யும்படி மையச் சங்கத்தினை கேட்டுக்கொண்டும், விரிவாகப் பேசினார். மேலும் நமது சங்கம் உயர் நீதிமன்றத்தில் அரசாணை எண்.1க்கு நல்ல தீர்வு கண்டுள்ளதற்கு மையச்சங்கத்திற்கு பாராட்டுதல்களை தெரிவித்தார்.

இதனையடுத்து, கிளைச்சங்க பொருளாளர், கிளையின் நாளது தேதி வரையிலான வரவு செலவு அறிக்கையினை உறுப்பினர்களுக்கு சமர்ப்பித்து, ஒப்புதலைப் பெற்றார்.

பின்னர் சிறப்பு அழைப்பாளர், பொறி.சி.கணபதி, மாநிலத்தலைவர் அவர்கள் தமது சிறப்புரையில் சங்க நடவடிக்கைகள் குறித்தும் 7-வது ஊதியக்குழு நிலைப்பாடுகள் குறித்தும், உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு பற்றியும், பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர்களாகவும், இளநிலை வரைதொழில் அலுவலர்களாகவும் பதவி உயர்வு பற்றியும், சங்கத்தில் தற்போது எதிர்கொண்டு வரும் வழக்குகள் பற்றியும் மிகவும் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், உறுப்பினர்கள் கருத்து நிகழ்வில் பொறி.ஆர்.தயாளகுமார், பொறி.என்.முருகேசன், பொறி.எஸ்.தங்கையன், பொறி.டி.செல்லன், பொறி.என்.சிவகுருநாதன், பொறி.எஸ்.கந்தசாமி, பொறி.ஏ.ராஜாசிதம்பரம் மற்றும் பொறி.வெங்கடேசன் ஆகியோர் தங்களது மேலான கருத்துக்களை பதிவு செய்தனர். பின்னர், உறுப்பினர் கருத்துக்களுக்கு, நமது மாநிலத்தலைவர் அவர்கள் மிக விரிவாக எடுத்துரைத்தார்.

அதன் பின்னர், 7-வது ஊதியக்குழு சம்பள விகிதத்தில் நமது உறுப்பினர்களாகிய இளநிலைப்பொறியாளர்கள் உதவிப் பொறியாளர்கள், உதவி செயற் பொறியாளர்கள் ஆகியோர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்வது தொடர்பான கருத்தினை பொறி.சண்முகம், உதவி செயற் பொறியாளர் அவர்கள் பதிவு செய்தார்.

அடுத்த நிழ்வாக 2018-ஆம் ஆண்டிற்கான நாட்சுவடி மற்றும் நாட்காட்டி உள்ளடக்கிய கிளையில் வழங்கப்பட்ட பரிசுப் பொருட்களை மாநிலத் தலைவர் பொறி.சி.கணபதி அவர்கள் வெளியிட்டார். இதனையடுத்து கீழ்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. 7-வது ஊதியக்குழுவில் நமது உறுப்பினர்களான இளநிலைப்பொறியாளர், உதவிப்பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர்களுக்கு உரிய ஊதிய விகிதத்தினை பெற்றுத்தருமாறு மையச்சங்கத்தினை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

2. நீண்டநாள் எதிர்ப்பார்ப்பான உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வினை விரைவில் பெற்றுத்தர மையச்சங்கத்தினை இக்கிளைச் சங்கம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

3. நமது தமிழ்நாடு பொறியியல் சங்கமும், சகோதர சங்கமான பொறியாளர் சங்கமும் ஒன்றாக அமர்ந்து ஒரு அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தி, முடிவுகள் எடுத்தால் மட்டுமே நல்ல தீர்வு ஏற்படும் என்பதை திருச்சி கிளைச்சங்கம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றது.

4. பணி ஆய்வாளர் பதவியிலிருந்து தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் இளநிலை வரைதொழில் அலுவலர் பதவி உயர்வினை விரைந்து பெற்றுத்தந்திட இந்த கிளைச்சங்கம் வலியுறுத்துகிறது.

5. பொதுப்பணித்துறையில் 10 ஆண்டுகள் தினப்பணியாளராக பணியாற்றி பணி நிரந்தரமான பணியாளர்களுக்கு, தினப்பணியாளராக பணியாற்றிய 10 ஆண்டு காலத்தில், 5 ஆண்டுகளை முழுமையாக ஓய்வூதிய கணக்கீட்டிற்கு எடுத்துக்கொள்ள இக்கூட்டம் வலியுறுத்துகின்றது.

## தஞ்சாவூர் கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளையின் பொதுக்குழு கூட்டம் டிசம்பர் திங்கள் 29.12.2017ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் பொறியியல் இல்லத்தில் கிழக்கு மண்டல செயலாளர் பொறி. A. ஜார்ஜ் ஆண்டனி பாபுராஜ் அவர்களின் தலைமையில் இறைவணக்கத்துடன் இனிதே துவங்கப்பட்டது.

உறுப்பினர்கள் அறிமுகத்திற்கு பின்னர் உறுப்பினர்கள் அனைவரையும் கிளையின் தலைவர் பொறி. R.வேதமூர்த்தி அவர்கள் வரவேற்று கிளைச் சங்க நடவடிக்கைகள் பற்றி விரிவாக பேசினார். கிளையின் செயல்பாடுகள் குறித்து கிளையின் செயலாளர் பொறி.T.சந்திரசேகரன் அவர்கள் விரிவாகப்பேசியும் மையச்சங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் உரையாற்றினார். பின்னர் கிழக்கு மண்டல செயலாளர் பொறி. A. ஜார்ஜ் ஆண்டனி பாபுராஜ் அவர்கள் மையச்சங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தும் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு விரிவாக விளக்கமும் அளித்தார். பின்பு கிளை பொருளாளர் பொறி. V.சிவப்பிரகாசம் அவர்கள் 2017ம் ஆண்டிற்கான வரவு, செலவு அறிக்கையை பொதுக்குழுவில் சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றார்.

2018ம் ஆண்டு நாட்சுவடி, நாட்காட்டி மற்றும் தஞ்சை கிளையின் சார்பாக உறுப்பினர்களுக்கு புத்தாண்டு பரிசையும் கிளையின் கிழக்கு மண்டல செயலாளர் வெளியிட பொறி.N.நாகராஜன் உதவிசெயற் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். கிளையின் இணைச்செயலாளர். பொறி. S. ஜெயக்குமார் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. அரசாணைஎண்.1க்கு உச்சநீதிமன்றத்திலும் நமக்கு சாதகமான தீர்ப்பினை பெற்றுத் தந்த மையபொறுப்பாளர்களுக்கும் மேலும் இத்தீர்ப்பிற்கு உதவிய நல்உள்ளங்களுக்கும் இக்கிளையின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

2. பணிஆய்வாளர் தரம்-II பதவியில் பட்டயம் பெற்ற நபர்களை இளநிலைவரைதொழில் அலுவலராகளாக பெயர் மாற்றம் செய்திட விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

3. பணிஆய்வாளர் தரம்-II பதவியில் பட்டயம் பெற்ற நபர்களை தொழில் நுட்ப உதவியாளர்களாக பெயர் மாற்றம் செய்திட விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக்கொள்கிறது

4. உதவி செயற்பொறியாளர் பதவிஉயர்வு பட்டியலை விரைந்து பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

5. இளம் பொறியாளர் பதவியில் பொறியியல் பட்டம் பெற்றவர்களுக்கு பட்டம் பெற்ற நாளிலேயே உதவிப்பொறியாளர் பணிமாற்றம் பெற்றுத் தர விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு இக்கிளை கேட்டுக் கொள்கிறது.

## மதுரை கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மதுரை கிளையின் 2018ம் ஆண்டிற்கான புத்தாண்டு பொதுக்குழு கூட்டம் 1.1.2018 திங்கள் கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கிளை துணைத்தலைவர் பொறி. B.இராமசுப்பிரமணியன் தலைமை வகித்தார். கிளை இணைச்செயலாளர் பொறி.D.மணிவண்ணன் வரவேற்றார். கிளை சங்க நடவடிக்கைகள் குறித்து பொறி.V.இரவிச்சந்திரன், செயலாளர் எடுத்துரைத்தார். வரவு, செலவு அறிக்கையை கிளை பொருளாளர் பொறி.J.சீனிவாசன் அவைக்கு வழங்கி ஒப்புதல் பெற்றார். பின் மைய மண்டல செயலாளர் பொறி.S.நடராஜரத்தினம் உரையாற்றினார். இக்கூட்டத்தின் முத்தாய்ப்பாக மாநில துணைத்தலைவர் பொறி.S.லீலாவதி அவர்கள் மையச்சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். பின் ஓய்வு பெற்ற மூத்த பொறியாளர்கள் S.இராஜாராம், P.குலசேகரன், D.சாமுவேல்ராஜ், N.கோவிந்தராஜன், P.முத்துக்கிருஷ்ணன், G.சுப்பிரமணியன் ஆகியோர் தற்போதைய சூழலில் கிளைச்சங்க பொறுப்பாளர்களும், மையச்சங்கமும் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று உத்வேகத்துடன் எடுத்துரைத்தார்கள். பின் கிளை உறுப்பினர்கள் பொறி. C.P.மோகன்குமார், பொறி.R.குருசாமி விதித்திருத்தப்பிரதிநிதி A.திருவேங்கடமூர்த்தி ஆகியோர் உரை ஆற்றினார்கள். பின்பு அனைத்து உறுப்பினர்களுக்கும் 2018ம் ஆண்டிற்குரிய டைரி மற்றும் காலண்டர் வழங்கப்பட்டது. பின் கிளை இணைச்செயலாளர் பொறி.G.இரமேஷ்குமார் நன்றி நவில நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. 7வது ஊதியக்குழுவில் பொறியாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள ஊதியக்குறைபாடுகளை களைந்து உறுப்பினர்களின் நலன் பாதிக்கப்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்க மையச்சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.
2. உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வை இனியும் காலம் தாழ்த்தாமல் விரைந்து பெற்றுத்தர வலியுறுத்துகிறது.
3. தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளை நிரப்புவதில் உள்ள குழப்பத்தை போக்கி நம் சங்க உறுப்பினர்களுக்கு கூடிய விரைவில் பெற்றுத்தர மையச்சங்கத்தை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.
4. ஒக்கி புயலால் பாதிக்கப்பட்ட தென்கோடி மக்களுக்கு ஆறுதலையும் உயிரிழந்த மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

## தேனி கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தேனி கிளையின் பொதுக்குழு கூட்டம் 29.12.2017 அன்று மாலை 6.30 மணியளவில் பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளராக மாநில உபதலைவர் பொறியாளர் எஸ்.லீலாவதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். கூட்டத்தில் கிளையின் தலைவர் பொறியாளர் ஆர்.தனிக்கொடி உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணியியலிருந்து ஓய்வு பெற்றதை

முன்னிட்டு மாநில உபதலைவர் அவர்களால் சால்வை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தேனி கிளையின் தலைவர் பொறி. ஆர். தனிக்கொடி அவர்கள் ஓய்வு பெற்றதை முன்னிட்டு கிளையின் தலைவர் பதவிக்கு பொறி.பி.தமிழ்ச்செல்வன் அவர்களை நியமித்து ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

2. தேனி கிளையின் உபதலைவர் பொறி.எஸ்நடராஜரத்தினம் அவர்கள் மைய மண்டல செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து கிளையின் உபதலைவர் பதவிக்கு பொறி.எஸ். கணேசமூர்த்தி அவர்களை நியமித்து அதனைத் தொடர்ந்து பொறி.எஸ்.மணிகண்டன் அவர்களை இணைச் செயலாளராக நியமித்து ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

3. பதவி பெயர் மாற்றம் பெற்ற உதவிப் பொறியாளர்களுக்கு உரிய காலத்திற்கான பணப்பயன் மற்றும் முதுநிலை பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. உதவி செயற்பொறியாளர் பதவிஉயர்வு பட்டியலில் அரசாணை எண்.1 மூலமாக பதவி மாற்றம் பெற்ற உதவிப் பொறியாளர்கள் பெயர் விடுபடாமல் பதவி உயர்வு பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறது.

5. பணிஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் / வரைவாளர் பதவி உயர்வு பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. பிரிவுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உருவாக்கிட உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## சிறப்பு வழக்கு நிதி வழங்கியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. C.P. சண்முகம் | உ.செ.பொ (ஓ) | சென்னை கிளை | ரூ. 500/- |
| 2. T.P. பாலசுப்ரமணியம் | இ.பொ (ஓ) | சென்னை கிளை | ரூ. 500/- |
| 3. S. செல்வமணி | உ.செ.பொ | சேலம் கிளை | ரூ. 5000/- |
| 4. M. செல்வராஜ் | உ.செ.பொ | சேலம் கிளை | ரூ. 5000/- |
| 5. S.S. சாந்தி | உ.பொ | சேலம் கிளை | ரூ. 4000/- |
| 6. A. முருகேசன் | உ.பொ | சேலம் கிளை | ரூ. 4000/- |
| 7. V. பிரேமா | உ.பொ | சேலம் கிளை | ரூ. 2000/- |
| 8. J. இராஜகோபால் | உ.பொ | சேலம் கிளை | ரூ. 2000/- |
| 9. M.P. சிவக்குமார் | உ.பொ | சேலம் கிளை | ரூ. 2000/- |

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் தெற்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் பி.இராமகிருஷ்ணன் உ.செ.பொ (ஓய்வு) அவர்கள் பணிஓய்வு பெற்றமைக்காக ரூ.2000/- (இரண்டாயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

# திருமண வரவேற்பு விழா
# அழைப்பிதழ்

அன்புடையீர்! வணக்கம்.

நிகழும் மங்களகரமான ஹேவிளம்பி வருடம் மாசி மாதம் 16-ம் தேதி (28.02.2018) புதன்கிழமை பகல் 11.00 மணி முதல் 3.00 மணிவரை

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மொரங்கம் கிராமம், கருங்கல்காடு, தெய்வத்திரு. கந்தசாமி கவுண்டர் - கந்தாயம்மாள் அவர்களின் மகன் வழி பேரனும், இராசிபுரம் வட்டம், அக்கரைப்பட்டி கிராமம், திரு.செங்கோட்டையன் - சம்பூரணம் அவர்களின் மகள் வழி பேரனும், திரு. மு.மெய்யழகன் - திருமதி. ஆ.கமலம் அவர்களின் குமாரனுமான

செம்பொன்குல திருநிறைச்செல்வன்

## Er. M. கண்ணன் M.E.,

(Asst. Professsor, Kongunadu College of Engineering and Technology, Thottiam)

சலம் மாவட்டம், சேலம் வட்டம், பனமரத்துப்பட்டி கிராமம், தெய்வத்திரு. ராமசாமி கவுண்டர் - வள்ளியம்மாள் அவர்களின் மகன் வழி பேத்தியும், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், எலச்சிபாளையம் கிராமம், கொல்லங்காடு, தெய்வத்திரு. சின்னுசாமி கவுண்டர் - கந்தாயம்மாள் அவர்களின் மகள் வழி பேத்தியும்,

திரு. K.R. வெங்கடாசலம் - திருமதி. V.ராணி அவர்களின் குமாரத்தியுமான

தூரங்குல திருநிறைச்செல்வி

## Er. V. கனிமொழி B.E.,

(First American India Pvt. Ltd., Salem)

ஆகியோரது திருமண வரவேற்பு விழா இராசிபுரம், சேந்தமங்கலம் பிரிவு ரோடு அருகில் உள்ள கொங்கு வேளாளர் சமுதாயக் கூடத் திருமண மண்டபத்தில் நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள



**Er.K. மெய்யழகன் D.C.R.E.,B.E**
இளம் பொறியாளர், பொதுப்பணித்துறை,
கட்டிட (க&ப) பிரிவு, இராசிபுரம்,
தலைவர், தமிழ்நாடு பொறியியல் சங்கம், சேலம் கிளை
**திருமதி.M.கமலம் மெய்யழகன்**
நிலக்கிழார், கருங்கல்காடு, மொரங்கம் கிராமம்,
வையப்பமலை வழி, திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.
செல்: 94437 23748, 94874 93748.

கொங்கு வேளாளர் சமுதாயக் கூடத் திருமண மண்டபம்
இராசிபுரம் to ஆத்தூர் பிரதான சாலையில் சுமார் 1 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.
பஸ் ஸ்டாப்: சேந்தமங்கலம் பிரிவு ரோடு, டவுண் பஸ் எண்: 2,8,11,12,18



[redacted]

Under Postal Regd No. TN/CH/(C)/358/18-20 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/ 2018-20 Date of Publiciation - 1 st Week of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

FEBRUARY 2018

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மதுரை கிளைப் பொதுக்குழு கூட்டத்தில் மூத்த பொறியாளர் D.சாமுவேல்ராஜ் அவர்களின் உரை




தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Posted on
10.02.2018

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,